# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 02 ஆம் திகதிய
## பகுதி II இற்குக் குறைநிரப்பி

(2017. 11. 08 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)

# உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள்
# (திருத்தம்)

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதாரு சட்டமூலம்**

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன்பற்றிய கூற்று**

**வாசகம் 2 :** இவ்வாசகம், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65அஅ என்னும் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது ஆங்கில, சிங்கள வரைவுகளுக்கிடையே ஒத்திசைவை ஏற்படுத்துவதாகும்.

## உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தம்)

ச.வ.–ஓ. 55/2017

### (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம், 2017 ஆம் ஆண்டின்    ஆம் இலக்க, உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தம்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

(262 ஆம் அத்தியாயத்தின் 65அஅ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**2.** (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65அஅ என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், “65 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு தெரிந்தனுப்பப்படுவதற்கு நிச்சயிக்கப்பட்ட எண்ணிக்கையை விஞ்சுமிடத்தும், அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் அத்தகைய எண்ணிக்கை எவரேனும் பெண் உறுப்பினரை உள்ளடக்காதவிடத்தும், அப்போது, இப்பிரிவின் (3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு ஏற்புடையனவாதலாகாது.” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, “65ஆ என்னும் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு தெரிந்தனுப்பப்படுவதற்கு நிச்சயிக்கப்பட்ட எண்ணிக்கையை விஞ்சுமிடத்தும், அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் அத்தகைய எண்ணிக்கை எவரேனும் பெண் உறுப்பினரை உள்ளடக்காதவிடத்தும், அப்போது, இப்பிரிவின் (3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற்

2-PL 010429-475 (2017/11)

கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு ஏற்புடையன வாதலாகாது.” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், “மூன்றுக்குக் குறை வான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக அல்லது தெரிந்தனுப்பப்பட்டவர்களாகக் கொண்டிருக்கு மிடத்து, அப்போது இப்பிரிவின் (3) ஆம், (4) ஆம் உட் பிரிவுகளின் ஏற்பாடுகள், அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு ஏற்பு டையனவாதலாகாது.” என்னும் சொற்களுக்கும் எண்க ளுக்கும் பதிலாக, “மூன்றுக்குக் குறைவான உறுப்பினர் களைத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக அல்லது தெரிந்தனுப்பப்பட்டவர்களாகக் கொண்டிருக்குமிடத்து, அப்போது இப்பிரிவின் (3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள், அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு ஏற்புடையன வாதலாகாது.” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், “இப்பிரிவின் 2 ஆம் உட்பிரிவிற்” மற்றும் “பெண் உறுப்பினர்களின் பகிர்வு,” என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக முறையே, “இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற்” மற்றும் “பெண் உறுப்பினர்களின் பகிர்வு,” என்னும் சொற் களையும் எண்ணையும் இடுவதன்மூலமும்;

(4) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில், “ உறுப்பினர்களின் எண்ணிக்கையிலான பற்றாக்குறை தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது உறுப்பினராகவிருப்பதற்கு 9 ஆம் பிரிவின்கீழ் தகைமையற்றவராகவுள்ள பெண் வேட்பாளர்கள் தவிர, முதலாவது நியமனப்பத்திரத்தில் அல்லது மேலதிக நிய மனப்பத்திரத்தில் உள்ள பெண் வேட்பாளர்களிலிருந்து தெரிந்தனுப்பப்படுதல் வேண்டும்.” என்னும் சொற்க ளுக்கும் எண்ணுக்கும் பதிலாக முறையே, “உறுப்பினர்

*களின் எண்ணிக்கையிலான பற்றாக்குறை தேர்ந்தெடுக் கப்பட்ட அல்லது உறுப்பினராகவிருப்பதற்கு 9 ஆம் பிரிவின்கீழ் தகைமையற்றவராகவுள்ள பெண் வேட்பாளர்கள் தவிர, முதலாவது நியமனப்பத்திரத்தில் அல்லது மேலதிக நியமனப்பத்திரத்தில் உள்ள பெண் வேட்பாளர்களிலிருந்து தெரிந்தனுப்பப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன்மூலமும் ; அத்துடன்*

(5) *அப்பிரிவுக்கான ஓரக்குறிப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :-*

*"பெண் உறுப்பினர்களைப் பகிர்வுசெய்தல்.".*

**3**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், *சிங்கள உரை* மேலோங்கி *நிற்றல்.*